தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

20.05.2013 A.M

## கரும்பு, நெல்லுக்கு உரிய விலை வேண்டும்

கரும்புக்கும், நெல்லுக்கும் உரிய விலை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாடு ஜூலை 24 முதல் 27-ம் தேதி வரை கடலூரில் நடைபெறுகிறது. இதற்கான முன்னேற்பாடாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில குழுக்கூட்டம், விழுப்புரத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். பொதுச் செயலர் சண்முகம், மாநில பொருளர் நாகப்பன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மாநிலத் தலைவர் எம்எல்ஏ பாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழக அரசு வறட்சி நிவாரண நிதி வழங்கியுள்ளதை வரவேற்கிறோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரண உதவி வழங்க வேண்டும். அதற்கு மத்திய அரசு நிதி அளிக்க வேண்டும். கரும்புக்கும், நெல்லுக்கும் உரிய விலை வழங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கத் தேர்தலை நடத்த தனி ஆணையம் அமைத்தும், முறையாக தேர்தல் நடைபெறவில்லை.

கெயில் நிறுவனம் விளை நிலங்கள் வழியாக குழாய் பதிப்பதை தமிழக அரசு தடுத்து நிறுத்தி சாலையோரங்களில் புதைக்க வழி வகை செய்தது. இந் நிலையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீத்தேன் வாயுவை எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் உண்டாகும் கழிவுகளால், அப்பகுதி விளைநிலங்கள் பாதிக்கப்படும்.

இப்பிரச்னையில் தமிழக முதல்வர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். மீத்தேன் வாயு எடுப்பதை கண்டித்து தஞ்சாவூரில் ஜூன் 4-ம் தேதி விவசாயிகளை திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

## வானூர் வட்ட விவசாயிகளுக்கு உழவர் அட்டை

வானூர் வட்டத்தில் உழவர் பாதுகாப்பு அட்டை வழங்குவது தொடர்பான ஆய்வுக் கூட்டம், வானூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தில் வானூர் வட்டம் முன்னோடி வட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக் கிராமத்தில் உள்ள 81 வருவாய் கிராமங்களில் 1,13,353 பேருக்கு இந்த அட்டைகள் வழங்கப்பட உள்ளன.

விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் 76,631 பேருக்கு சிவப்பு நிற அட்டை வழங்கப்பட உள்ளது. விவசாய தொழிலாளர்கள் குடும்பத்தில் இருந்து படித்து வரும் 18 வயதுக்கு உள்பட்ட மாணவர்கள் 36,702 பேருக்கு சாம்பல் நிற அட்டை வழங்கப்பட உள்ளது. இந்த அட்டைகள் அச்சடிக்கப்பட்டு வந்துள்ளன.

இதில் பெயர் முகவரி சரியாக உள்ளதா, இதை முறையாக அனைவருக்கும் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், வானூரில் சனிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார்.

நில நிர்வாக அலுவலக உதவி ஆணையர் தங்கப்பாண்டியன், சமூக பாதுகாப்பு தனித்துணை ஆட்சியர் இளங்கோவன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அனுசுயாதேவி, வட்டாட்சியர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பண்ணைக் குட்டைகள் அமைக்க உழவர் பெருவிழாவில் விளக்கம்

கள்ளக்குறிச்சி ஒன்றியம் சிறுவத்தூரில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் கே.தர்மலிங்கம் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு துணைத் தலைவர் மு.கண்ணன், மாவட்ட கவுன்சிலர் க.மணி முன்னிலை வகித்தனர். ஊராட்சித் தலைவர் து.பழனிவேல் வரவேற்றார்.

ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தில் 50 சதவீத மானியம், சொட்டுநீர் பாசனத்தில் செம்மை கரும்பு சாகுபடி, திருந்திய நெல் சாகுபடி அவசியம், பண்ணை குட்டைகள் அமைத்து நீராதாரம் பெருக்குவது, மானிய விலையில் சூரியஒளி பம்பு செட்டுகள் பெறுவது ஆகியவை குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் கே.தர்மலிங்கம் பேசினார்.

உழவர் பெருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை எம்.எல்.ஏ அழகுவேலு பாபு திறந்து வைத்து பார்வையிட்டார். விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த கையேட்டை வழங்கினார். அறுசுவை உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், வேளாண்மை அலுவலர் ந.பொன்னுராசன், சீ.தேவி, விவசாயிகள், ஊர் மக்கள் பங்கேற்றனர்.

## சிறு தானியங்களை உணவில் சேர்க்க உழவர் பெருவிழாவில் அறிவுரை

சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம், திணை ஆகியவற்றை பொதுமக்கள் உணவில் சேர்த்துக் கொண்டு வளமான உடல் நலத்தைப் பெற வேண்டும் என வேளாண் உதவி இயக்குனர் சண்முகையா தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் உழவர் பெருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பேரூராட்சித் தலைவர் முத்துகுமரன் தலைமை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் சிவகுமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கும்மிடிப்பூண்டி ஒன்றியக்குழு தலைவர் குணம்மா கோபால் நாயுடு கலந்து கொண்டார். வேளாண் உதவி இயக்குனர் சண்முகையா பேசியது:

இயற்கை விவசாயம் நிலத்துக்கு மட்டுமின்றி அதனால் பயன்பெறும் மக்களின் உடல் நலத்துக்கும் நல்லது. தற்போதைய சூழலில் நாட்டில் 80 சதவீத மக்களுக்கு சக்கரை நோய் உள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த கேழ்வரகால் செய்யப்பட்ட சாதம், களி, புட்டு போன்றவற்றை உட்கொள்ள வேண்டும்.

அதே போல உடற்சூட்டை ஏற்படுத்தும் குளிர்பானங்களுக்குப் பதிலாக உடல் சூட்டைத் தணிக்கும் இளநீரை வெயிலுக்குப் பருக வேண்டும். மூளை, தோலை பாதிக்கும் ஷாம்புவிற்குப் பதிலாக பக்க விளைவுகள் ஏதுமில்லாத சிகைக்காயைப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம் பேசுகையில் கத்திரி, வெண்டை போன்ற தோட்டப் பயிர்களுக்கு தரமான விதைகள் வழங்கப்படுவதையும், சொட்டு நீர் பாசனம், செயற்கை மழை தெளிப்பான் போன்றவை இலவசமாக வழங்கப்படுவது குறித்தும் பேசினார்.

துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன் உயிர் உரங்கள் குறித்தும், வேளாண் பொறியியல் துறை பொறியாளர் துரைசாமி நவீன வேளாண் இயந்திரங்கள் குறித்தும், வேளாண் விற்பனைப் பிரிவு அலுவலர் அருள்முருகன் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துதல் குறித்தும்

பேசினர்.

பேரூராட்சி கவுன்சிலர் தீனதயாளன் பேசுகையில், விவசாயிகளுக்கு உரிய பருவத்தில் விதைகள் மற்றும் உரம் கிடைக்க செய்ய வேண்டும். அனைத்து விவசாயிகளும் வேளாண் துறை வழங்கும் மானியத்தைப் பெற வழி செய்ய வேண்டும். மாதத்துக்கு ஒரு முறை விவசாயிகளுக்கு நவீன வேளாண் பயிற்சிகள் தர வேண்டும் என்றார்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள், ஒருங்கிணைந்த கையேடு ஆகியவற்றை பேரூராட்சி செயல் அலுவலர் மணிவேல் வழங்கி பாரம்பரிய வேளாண் விளைபொருட்களின் பயன்பாடு குறித்த பேரணியைத் தொடங்கி வைத்தார்.

## விளை நிலங்களில் மண் பரிசோதனை அவசியம்

விவசாய நிலங்களில் கட்டாயமாக மண் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என வேளாண் உதவி இயக்குனர் சண்முகையா தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டி அடுத்த சுண்ணாம்புகுளம் ஊராட்சியில் உழவர் பெருவிழா ஊராட்சி மன்றத் தலைவர் வனிதா அரசு தலைமையில் நடைபெற்றது. உதவி வேளாண் அலுவலர் சுகுணா வரவேற்றார்.

வேளாண் உதவி இயக்குனர் சண்முகையா பேசுகையில், சுண்ணாம்புகுளம் பகுதி உவர்ப்பு நிலப்பகுதி என்பதால் மண் பரிசோதனையை அனைத்து விவசாயிகளும் செய்து மண்ணுக்கு தழைச்சத்தை அதிக அளவு தந்து வந்தால் காலப்போக்கில் உவர்ப்புத் தன்மை குறையும். உவர்ப்பு நிலத்துக்கு ஏற்ற நெல் ரகங்களைப் பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்றார்.

துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் பேசுகையில், விவசாயிகளுக்கு 80 சதவீத மானிய விலையில் சோலார் மோட்டார்கள் வழங்கப்பட உள்ளது. அதனைப் பயன்படுத்தி மின்சாரம் இல்லா நிலையிலும் நீர்ப்பாசன வசதியைப் பெற முடியும் என்றார்.

தொடர்ந்து வேளாண் பொறியியல் துறை பொறியாளர் துரைசாமி, வேளாண் விற்பனை மற்றும் வணிகப் பிரிவு அலுவலர் அருள்முருகன் ஆகியோர் பேசினர். அதேபோல் ஓபசமுத்திரம் ஊராட்சியில் ஊராட்சி மன்றத் தலைலர் காளத்தி தலைமையிலும், மெதிப்பாளையம் ஊராட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் ராமஜெயம் தலைமையிலும் உழவர் பெருவிழா நடைபெற்றது.

## நீராதாரங்களை மேம்படுத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்க ஆட்சியர் வலியுறுத்தல்

சிவகங்கை மாவட்டத்தில் நீராதாரங்கள் அதிக அளவு கிடைக்கும் இடங்களில் சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும் என ஆட்சியர் வே. ராஜாராமன் வலியுறுத்தினார்.

மதகுபட்டி கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் அவர் பேசியதாவது:

இந்த கிராமத்தில் அனைத்துப் பயிர்களையும் சாகுபடி செய்யும் வகையில் மண் அமைந்துள்ளது. இங்கு 40 அடி முதல் 50 அடிக்குள் கிணற்றில் தண்ணீர் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு மானாவாரி நிலங்களை கிணற்றுப் பாசனத்துடன் இணைத்து சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்ற வேண்டும். இதன் மூலம் சாகுபடி பரப்பை அதிகரித்து விவசாய வருவாயைப் பெருக்கிட வேண்டும். விவசாய நிலங்களை ஒருங்கிணைத்து அரசு திட்டங்கள் மூலம் ஆழ்துளை கிணறு அமைத்து மானாவாரி நிலங்களையும் பாசன நிலங்களாக மாற்ற வேண்டும்.

மேலும் விவசாயத்துடன் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் மூலம் ஆடு, மாடு, கோழி, மீன், பட்டுப்புழுக்கள் ஆகியவற்றை வளர்க்க வேண்டும். மின்வசதி இல்லாத விவசாய நிலங்களில் அரசு வழங்கும் 80 சதவீத மானி உதவியுடன் சூரியசக்தி மூலம் இயங்கும் மோட்டார்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

ஒக்கூர், அலவாக்கோட்டை பகுதிகளில் மீத்தேன் வாயு (பயோகேஸ்) மூலம் விவசாய மின்மோட்டார்களை பயன்படுத்தி நடைபெறும் விவசாயப் பணிகளைப்போல பிற விவசாயிகளும் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்றார் ஆட்சியர்.

இந் நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பாஸ்கரன் அம்பலம், வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பயிர் இழப்பீடு தொகை:காசோலையாக வழங்க ஆட்சியர் உத்தரவு

கடலாடி தாலுகாவில் மேலும் 2 ஊர்களில் விவசாயிகளுக்கு காசோலை மூலம் பயிர் இழப்பீடு தொகை வழங்க ஆட்சியர் க. நந்தகுமார் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் வறட்சி காரணமாக 2013 ஆம் ஆண்டிற்குரிய பயிர் இழப்பீடு நிவாரண உதவித் தொகை குறிப்பிட்ட மாவட்டங்களில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றன.

ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தாலுகா ஏ. புனவாசல் கூட்டுறவு வங்கியில் மட்டும் விவசாயிகளுக்கு மே 15 முதல் காசோலை மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த வங்கியில் கடந்த ஆண்டு முறைகேடுகள் நடைபெற்றதே இதற்குக் காரணம் ஆகும்.

இந் நிலையில், கடலாடி தாலுகா, பூக்குளம் வங்கியில் ராக்கு என்ற பெண் விவசாயிக்கு நிவாரணத் தொகையாக ரூ.8,675-க்குப் பதிலாக ரூ.875 பணம் பிடித்தம் செய்யப்பட்டு, ரூ.7,800 மட்டுமே வழங்கப்பட்டதாம்.

இந்த முறைகேடு குறித்து கிராம நிர்வாக அலுவலர் ஐயப்பன் அளித்த புகாரில் இளஞ்செம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் குமரன், சார்பு ஆய்வாளர் அருள் பிரகாஷ் ஆகியோர் வழக்குப் பதிவு செய்து, வங்கி எழுத்தர் முருகனை கைது செய்தனர்.

தலைமறைவான வங்கிச் செயலர் கருப்பசாமியை தனி போலீஸ் படையினர் தேடி வருகின்றனர்.

இதே போன்று கடலாடி தாலுகா, எஸ். மாரியூர் வங்கியிலும் நிவாரணத் தொகை 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை பிடித்தம் செய்யப்படுகிறது என்ற புகார் தெரி விக்கப்பட்டது.

இது குறித்து வட்டாட்சியர் கே. அமிர்தம் உடனே வருவாய்த் துறையினருடன் எம். மாரியூர் வங்கிக்குச் சென்று விசாரணை நடத்தி, ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பினார். இதையடுத்து பூக்குளம், எஸ். மாரியூர் வங்கிகளில் நிவாரண உதவித் தொகையை திங்கள்கிழமை முதல் காசோலையாக வழங்க ஆட்சியர் நந்தகுமார் உத்தரவிட்டுள்ளார்.

## சித்தனேந்தல் கிராமத்தில் உழவர் பெருவிழா

நயினார்கோவில் வட்டாரம், சித்தனேந்தல் கிராமத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியால் உணவு உற்பத்தியை இரண்டு மடங்கு அதிகப்படுத்தி, அதனால் விவசாயிகள் மூன்று மடங்கு லாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கில் கிராமங்கள்தோறும் வேளாண் துறையினர் விவசாயிகளை அழைத்து உழவர் பெருவிழா கொண்டாடி வருகின்றனர்.

இதன் அடிப்படையில் சித்தனேந்தல் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமாறன் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர்கள் ஜி. முனியசாமி, கோவிந்தன், ஒன்றியச் செயலர் வி.கே.பி. கார்மேகம், ஒன்றியக் குழு துணைத் தலைவர் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் துறை துணை இயக்குநர் ஆர். அரிவாசகன் வரவேற்றார்.

இதில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் எஸ். சுந்தரராஜ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகளை வழங்கிப் பேசியது:

உழவர் பெருவிழா மாவட்டத்தில் 400 இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அரசு அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று அரசு திட்டங்களை மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக அம்மா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடத்தப்பட்டு, அரசின் திட்டங்கள் மக்களிடம் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற விழாக்களில் கலை நிகழ்ச்சிகள் மூலம் விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாறும் நிலையைப் போக்கி பாரம்பரிய உணவு உற்பத்தியை அதிகரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

காவிரியில் தண்ணீர் திறக்கப்படாததால் டெல்டா விவசாயம் பாதிப்படைந்து வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சியைப் போக்க அனைவருக்கும் வேலை உறுதியளிப்பு திட்டத்தின் மூலம் 100 நாள் வேலையை 150 நாள்களாக நீட்டித்தும், அதற்கான கூலி ரூ.136 லிருந்து ரூ.148 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னையைத் தவிர 31 மாவட்டங்களில் 3.5 லட்சம் டெல்டா விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.542 கோடியும், அதைத் தவிர்த்து 40 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.871 கோடி வறட்சி நிவாரணமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, தினை போன்ற பாரம்பரிய உணவு உண்டதால் முன்னோர்கள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர். அதை மறந்து செயற்கை உரங்களால் உற்பத்தியாகும் உணவு வகைகளை அதிகம் சாப்பிடுவதால் சர்க்கரை நோய் போன்ற பல்வேறு நோய்கள் தாக்கப்பட்டு அதிக மருத்துவச் செலவு செய்யும் நிலை உள்ளது.

மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 100 சதவீதம் மானியத்தில் தோட்டக்கலை மூலம் அனைத்துப் பொருள்களும் வழங்க ரூ.35 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் உழவர் அட்டை பெற்றுள்ள 6.99 லட்சம் பேரில் விபத்துக் காப்பீடு, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை எனப் பல்வேறு சலுகைகளுக்காக ரூ.5.10 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

விழாவில் வேளாண் துறையினர், விவசாயிகள், மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது.

## வறட்சி நிவாரணம் மோசடி: கோட்டாட்சியர் விசாரணை

ஆர்.எஸ். மங்கலம் அருகே ஏ.ஆர். மங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் வறட்சி நிவாரணம் வழங்குவதில் மோசடி செய்துள்ளதாகப் புகாரின் பேரில் கோட்டாட்சியர் லாரன்ஸ் விசாரணை செய்து வருகிறார்.

ஏ.ஆர். மங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் சித்தூர்வாடி கிராமத்தைச் சேர்ந்த அந்தோணியம்மாளுக்கு வறட்சி நிவராணம் ரூ.11 ஆயிரம் வழங்க வேண்டும்.

ஆனால் சங்கச் செயலர் அருணாசலம் ரூ.4 ஆயிரத்து 882 மட்டுமே வழங்கியுள்ளார்.

சந்தேகம் அடைந்த அந்தோணியம்மாள் ராமநாதபுரம் கோட்டாட்சியரிடம் புகார் தெரிவித்துள்ளார்.

கோட்டாட்சியர் உத்தரவின்படி கிராம நிர்வாக அலுவலர் ராஜபாண்டி சோதனையிட்டபோது பதிவேட்டில் திருத்தம் செய்யபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதன்பேரில் கோட்டாட்சியர் லாரன்ஸ், வட்டாட்சியர் பழனியாண்டி ஆகியோர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## இன்று வேளாண் சிறப்புக் கருத்தரங்கு

திருவண்ணாமலையில் திங்கள்கிழமை (மே 20) நடைபெறும் பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களை மீண்டும் வழக்கத்துக்கு கொண்டுவருவதற்கான சிறப்பு கருத்தரங்கை மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தொடங்கி வைக்கிறார்.

திருவண்ணாமலை, வேங்கிக்கால், ஹரிகரன் திருமண மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு விழா தொடங்குகிறது.

பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களான இளநீர், சீயக்காய், பருத்தி மற்றும் சிறுதானியப் பொருள்களின் முக்கியத்துவத்தை விளக்கி, அப்பொருள்களை மீண்டும் வழக்கத்துக்கு கொண்டுவருவதற்காக இக் கருத்தரங்கம் நடத்தப்படுகிறது.

மாலை 5 மணி வரை நடைபெறும் இக் கருத்தரங்கில், வேளாண் துறை விஞ்ஞானிகள், வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வனத் துறை, வேளாண் வணிகத் துறை, கதர்

மற்றும் கிராம வளர்ச்சித் துறை, கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவிக்கின்றனர்.

எனவே, விவசாயிகள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

## உழவர் பெருவிழாவில் நலத்திட்ட உதவிகள்

அனக்காவூர் வட்டாரத்தில் சுமார் ரூ.12.30 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ஏழுமலை கூறினார்.

செய்யாறை அடுத்த ஆலந்தூர் கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவுக்கு அனக்காவூர் ஒன்றியக் குழு துணைத் தலைவர் ஜெயலட்சுமி சுப்பராயன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்றத் தலைவர் செல்லியம்மாள் முன்னிலை வகித்தார்.

விழாவில் அனக்காவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ஏழுமலை பேசியுது: அனக்காவூர் வட்டாரத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாக்களில் உளுந்து, நெல் விதைகள், விசைத் தெளிப்பான, கைத் தெளிப்பான, நேரடி நெல் விதைக்கும் கருவிகள், பவர் டில்லர் என சுமார் ரூ.12.30 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

விழாவில் பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்று வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்துப் பேசினர்.

பாரம்பரிய வேளாண் பொருள்களான கேழ்வரகு, கம்பு போன்ற சிறுதானியங்கள், இளநீர், பருத்தி, சீயக்காய் உள்ளிட்டவை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## நாரையூரில் உழவர் பெருவிழா

திருவண்ணாமலையை அடுத்த நாரையூர், வெண்ணியந்தல் கிராமங்களில் சனிக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

வெண்ணியந்தல் கிராமத்தில் ஊராட்சித் தலைவர் கிருஷ்ண தயாளன், நாரையூர் கிராமத்தில் ஊராட்சித் தலைவர் எம்.முருகன் ஆகியோர் தலைமையில் விழாக்கள் நடைபெற்றன. ஒன்றியக் குழு துணைத் தலைவர் எஸ்.ராஜேஸ்வரி முன்னிலை வகித்தார்.

திருவண்ணாமலை வேளாண் உதவி இயக்குநர் இரா.பெரியசாமி, சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு விவசாயத்தில் இரு மடங்கு உற்பத்தியைப் பெறுவது தொடர்பான தொழில்நுட்பங்களை விளக்கிப் பேசினார். விழாவில், விவசாயிகள் சிலருக்கு மானிய விலையில் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

கால்நடை பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் ஆர்.ராஜ்குமார், விதைச் சான்று அலுவலர் பழனி, தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர் சந்திரன் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள், விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

## அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

தருமபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என திமுக வலியுறுத்தியது.

தருமபுரி வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் தனக்கோடி தலைமை வகித்தார்.

மாவட்டப் பொறுப்பாளர் பி.என்.பி.இன்பசேகரன், துணைச் செயலாளர்கள் ஜி.வி.மாதையன், ராஜேஸ்வரி, பென்னாகரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சி.தனபாலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மக்களவைத் தேர்தல் நிதி இலக்காக ரூ.1.03 கோடி நிதி திரட்டி வழங்க உதவிய அனைத்து கட்சி நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க முறையான கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## உடல் நலத்தைப் பாதுகாக்க வேளாண் பொருள்களைப் பயன்படுத்துவது அவசியம்

உடல் நலத்தைப் பாதுகாக்கப் பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களை மக்கள் பயன்படுத்திட வேண்டும் என்று, தமிழக தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி தெரிவித்தார்.

பாரம்பரியமிக்க வேளாண் பொருள்கள் விழிப்புணர்வு கண்காட்சி, கருத்தரங்கம் நாமக்கல் எஸ்பிஎஸ் மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் டி.ஜகந்நாதன் தலைமை வகித்தார். அமைச்சர் பி.தங்கமணி கண்காட்சி, கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசியது:

பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களான இளநீர், சீகைக்காய், பருத்தி ஆடைகள் மற்றும் இதர வேளாண் பொருள்களின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், அந்தப் பொருள்களை மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்திடவும் இந்தத் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்தார்.

இளநீர் அதிகம் அருந்துவதால் பல கொடிய நோய்களிலிருந்தும் உடலை காக்க முடியும். அத்துடன் தொற்றுநோய்கள் வராமலும், வயிற்றுப்புண், சிறுநீரகக் கல்களால் ஏற்படும் இடையூறுகளிலிருந்தும் பாதுகாக்கலாம். எனவே, பொதுமக்கள் இளநீரை அதிகளவில் அருந்திட வேண்டும்.

தவிர, தற்போதைய பொருளாதார முன்னேற்றம் காரணமாக பொதுமக்கள் பாரம்பரியமிக்க வேளாண் பொருள்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்து, செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பொருள்களை பயன்படுத்துவதில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த நிலையை மாற்றிட வேண்டும். உடல்நலம் காக்கவும், வெப்பத்தினால் ஏற்படும் நோய்களைத் தவிர்க்கவும் மக்கள் பருத்தி ஆடைகளை பயன்படுத்திட வேண்டும்.

செயற்கையான சாம்பு வகைகளைப் பயன்படுத்தாமல் சீகைக்காய் உபயோகப்படுத்தினால் தோல் சார்ந்த நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும் என்றார் அவர்.

தொடர்ந்து, 15 விவசாயிகளுக்கு ரூ.75,000 மானியத்தில் வேளாண் இடுபொருள்கள், திருந்திய நெல்சாகுபடி திடல் அமைத்தல், மண்புழு யூனிட் அமைத்தல், தொழுஉரம் தயாரித்தல், தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

நாமக்கல் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.பி.பாஸ்கர், சார்ஆட்சியர் அஜய் யாதவ், நகர்மன்றத் தலைவர் ஆர்.கரிகாலன், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ப.முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.05.2013 A.M**

---

## கால்நடைகளுக்கு தீவனமாகும் மக்காச்சோள சக்கை

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளுக்கு மக்காச்சோள சக்கைகளை தீவனமாக வழங்கப்படுகிறது. தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, நாகியம்பட்டி, உலிபுரம், வாழக்கோம்பை, கொண்டயம்பள்ளி, மண்மலை, பாலக்காடு, செங்ககட்டு, செங்காடு, சேரடி, பிள்ளையார்மதி, கீரிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான மாடு, ஆடுகள் வளர்க்கப்படுகின்றன.

மழை பெய்யாததால், மேய்ச்சல் நிலம் காய்ந்ததாலும், தீவனங்களின் விலை உயர்ந்ததாலும் கால்நடைகளுக்கு போதிய தீவனங்கள் கிடைப்பதில்லை. இதனால், பால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

மேலும், விவசாயிகள் சிலர் தங்கள் கால்நடைகளை குறைந்து விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், கால்நடை தீவனமாக மக்காச்சோள சக்கைகளின் விற்பனை சூடு பிடித்துள்ளது.

இதுகுறித்து மக்காச்சோள சக்கை விற்பனையாளர்கள் கூறியது:

மக்காச்சோளம் அரைக்கப்பட்டு  பிஸ்கட், குளுக்கோஸ் போன்றவை தயாரிக்க அனுப்பப்படுகின்றன.

இதில், சத்து உறிஞ்சப்பட்ட மக்காச்சோளத்தின் கழிவுகள் கிலோ ரூ.6க்கு விற்பனை செய்து வருகிறோம் என்றனர். புண்ணாக்கு, தவிடு உள்ளிட்ட கால்நடைத் தீவனங்களின் விலை அதிகரித்ததால், மக்காச்சோளச் சக்கைகளை கால்நடைகளுக்கு பயன்படுத்தி வருகிறோம்.

இதனுடன் தவிடு சேர்த்து வழங்குவதால் மாடுகள் கூடுதலாக பால் தருவதாக விவசாயிகள் கூறினர்.

## விவசாயிகளுக்கு ரூ. 7 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு

மத்திய அரசு மூலம் இந்த நிதியாண்டில் விவசாயிகளுக்கு ரூ. 7 லட்சம் கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே. வாசன்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி எம்எல்ஏ மறைந்த எஸ். சதாசிவம் திருவுருவச்சிலை, மணிமண்டபத் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.  கரூர் மக்களவை முன்னாள் உறுப்பினர் கே. நாட்ராயன் தலைமை வகித்தார்.

விழாவில் சிலையைத் திறந்துவைத்து வாசன் மேலும் பேசியது:

கல்வி, விவசாயம், குடிநீர் திட்டம், கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என சதாசிவம் போன்றோர் எந்த அளவுக்குப் பாடுபட்டார்களோ அதைத்தான் காங்கிரஸ் நிறைவேற்றிவருகிறது.

காங்கிரஸ் ஆட்சியில் இலவசக் கட்டாயக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டது.

இதன் மூலம் 1 கோடியே 11 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் கல்வி கற்கும் நிலை உருவானது.

சுகாதாரத்தை மேம்படுத்த ரூ. 21 ஆயிரத்து 882 கோடி, கிராம மக்களின் குடிநீர் தேவைக்காக ரூ. 15 ஆயிரத்து 260 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

விவசாயம் மேம்பட விவசாயிகளுக்கு வங்கிக் கடனாக 2012-13 ல் ரூ. 5 லட்சத்து 82 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த நிதியாண்டுக்கு ரூ. 7 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல ஊரக வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ. 80 ஆயிரம் கோடி, கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ. 37 ஆயிரம் கோடி, பஞ்சாயத்து ராஜ் திட்டத்துக்கு ரூ. 500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

மணிமண்டபத்தைத் திறந்துவைத்து முன்னாள் மத்திய அமைச்சர் ஈவிகேஎஸ். இளங்கோவன் பேசியது:

ராகுல்காந்தி தலைமையில் காங்கிரஸ்க்கு ஒரு நல்ல தலைமை கிடைத்துள்ளது. இவரது செயல்பாடு கட்சிக்கு முன்னேற்றத்தை கொடுக்கும். காங்கிரஸ் ஆட்சியை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதற்கு உதாரணம் அண்டை மாநிலத்தில் காங்கிரஸ்க்கு கிடைத்த வெற்றி. தேர்தல் வெற்றிக்காக அல்லாமல், நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் கட்சி காங்கிரஸ் என்றார் இளங்கோவன்.

விழாவில் நினைவு மலரை முன்னாள் எம்பி. எஸ்.கே. கார்வேந்தன் வெளியிட, அரவக்குறிச்சி எம்எல்ஏ கே.சி. பழனிசாமி பெற்றுக் கொண்டார்.

முன்னாள் எம்எல்ஏ வெள்ளியணை வி. ராமநாதன், டி.என். சிவசுப்பிரமணியன், பாலமலை, மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பேங்க் சுப்பிரமணியன், முன்னாள் சேர்மன் எஸ். முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சர் ம. சின்னசாமி, முன்னாள் எம்எல்ஏக்கள் கே.கே. முத்தையா, பேரூர் ஆ. நடராஜன், விடியல் எஸ். சேகர், எஸ். ஜெகதீசன், இளைஞர் காங்கிரஸ் முன்னாள் பொதுச் செயலர் எஸ். ஜோதிமணி, உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் கே. செல்லமுத்து உள்ளிட்டோர் பேசினர்.

எஸ். சதாசிவம் நினைவு அறக்கட்டளைப் பொருளாளர் ஆர். சீரங்கராயன் வரவேற்றார். சதாசிவம் குடும்பத்தின் சார்பில் அவரது மகன் எஸ். தமிழ்மணி ஏற்புரையாற்றினார். அறக்கட்டளை செயலர் பிபி. முருகேசன் நன்றி தெரிவித்தார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 20.63 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 20.63 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496

கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.   கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### ஒரத்தநாடு பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவ மையம் திறப்பு

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவ மையங்களை தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்  ஆர். வைத்திலிங்கம் சனிக்கிழமை தொடங்கிவைத்தார்.

ஒரத்தநாடு வட்டம். கண்ணந்தங்குடி மேலையூர் மற்றும் தெலுங்கன்குடிகாடு ஆகிய ஊராட்சிகளில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவ மையத்தை அமைச்சர் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் பேசியது:

இன்னும் இந்த பகுதிகளில் நான்கு ஐந்து இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவ மையங்கள் திறக்கப்படும். இந்த கால்நடை மருத்துவ மையங்களில்  கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்கவேதாடு வறட்சி காலங்களில் தமிழக அரசு கால்நடைகளுக்கு மானிய விலையில் வழங்கும் தீவனங்களும் விநியோகிக்கப்பட உள்ளது என்றார் அமைச்சர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் பி,என். ராமச்சந்திரன், கால்நடை பல்கலைக்கழக முதல்வர் வீரபாண்டியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பாரம்பரிய உணவுப் பெருள்கள் குறித்த கருத்தரங்கம்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வட்டாரத்தில் உள்ள சித்தளி கிராமத்தில் பாரம்பரிய பொருள்களான இளநீர், சீயக்காய், பருத்தி ஆடைகள், வரகு, திணை, சாமை உள்ளிட்ட சிறு தானியங்களின் பயன்பாடுகள் குறித்த கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

சித்தளி ஊராட்சி தலைவர் நாகராஜன் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு உறுப்பினர் செங்குட்டுவன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை வேளாண் இயக்குநர் ந.பன்னிர்செல்வம் பொதுமக்களுக்கு மோர் மற்றும் சீயக்காய் வழங்கி பேசினார். கருத்தரங்கில், வேளாண் துணை இயக்குநர் ஆல்பர்ட் சிறு தானியங்களின் முக்கியத்துவம் குறித்தும், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்சி நிலைய உதவி பேராசிரியர் டாக்டர் பாரதி பெருமாள் சீயக்காய் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகள், மருத்துவ குணங்கள் குறித்தும், வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மைய பொறுப்பாளர் சரவணன் பருத்தி ஆடைகளின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கி பேசினர்.

தொடர்ந்து, வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் நடராஜன் இயந்திரங்களும் அதன் பயன்பாடுகள் குறித்தும், உதவி வேளாண் அலுவலர் முருகேசன் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் குறித்தும், துணை வேளாண் அலுவலர் ராமச்சந்திரன் வேளாண்துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விளக்கி கூறினர்.

பெரம்பலூர் மாவட்ட இணை வேளாண் இயக்குநர் அலுவலக வேளாண் அலுவலர் ராஜேந்திரன் பருத்தி மற்றும் மக்காச்சோள சாகுபடி குறித்த தொழில் நுட்பம், பருத்தியில் இயந்திரம் முலம் பஞ்சு எடுக்கும் முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தார்.

இதில், வேப்பூர் வட்டார அட்மா திட்ட தொழில் நுட்ப அலுவலர்கள் ரா.பிரதிபா, அதிரூபன், முத்தழகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கமாலுதின், மு.மணி, நெப்போலியன், அய்யாசாமி, நல்லத்தம்பி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

வேளாண் அலுவலர் அமிர்தவள்ளி நன்றி கூறினார்.

## கடும் வறட்சி: உற்பத்திக் குறைவால் பால் வடிப்பை நிறுத்தும் ரப்பர் விவசாயிகள்

குமரி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் ரப்பர் பால் உற்பத்தி சரிந்துள்ளது. இதையடுத்து ரப்பர் விவசாயிகள் பால் வடிப்பை நிறுத்தி வருகின்றனர்.

ரப்பர் மரங்களில், குளிர்கால இலையுதிர்வுக்குப் பின் கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் பால்வடிப்புத் தொடங்கியது. அப்போது தொடர்ந்து சில நாள்கள் மழை பெய்ததால், ரப்பர் மரங்களிலிருந்து பால் உற்பத்திக் கிடைக்கும் என விவசாயிகள் நம்பினர். ஆனால் இப்போது இயல்புக்கு மாறாக கடும் வறட்சி நிலவுவதால், ரப்பர் பால் உற்பத்தி அடியோடு சரிந்துள்ளது.

இதனால் உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வருவாயை விட, பால் வடிப்புக் கூலி உள்ளிட்ட உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளதால், பால்வடிப்பை சிறு விவசாயிகள் நிறுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து திற்பரப்பு பகுதியைச் சேர்ந்த ரப்பர் விவசாயி சதீஷ் கூறியதாவது, ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் ரப்பர் மரங்களில் பால்வடிப்புத் தொடங்கும். கடந்த ஆண்டு பருவமழை மிகக்குறைந்த அளவில் பெய்ததாலும், இப்போது மழையின்மையால் கடும் வறட்சி நிலவுவதால் பால் உற்பத்தி முற்றிலுமாகக் குறைந்துள்ளது. சராசரியாக ஒரு ஏக்கருக்கு, சீசன் காலங்களில் 15 கிலோ கிராம் உலர் ரப்பர் கிடைக்கும். இது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 7 கிலோவாக இருக்கும். ஆனால் இப்போது ஒரு ஏக்கரிலிருந்து 4 முதல் 5 கிலோ வரை மட்டுமே உலர் ரப்பர் கிடைக்கிறது. இதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு கூலி மட்டுமே கொடுக்க முடியும். முதிர்ந்த ரப்பர் மரங்களைக் கொண்ட தோட்டங்களில், இதைவிடக் குறைந்த அளவிலேயே வருவாய் கிடைக்கிறது. இதனால் பல விவசாயிகள் பால்வடிப்பை மீண்டும் நிறுத்தி வருகின்றனர்.

வறட்சி நிவாரணம் வேண்டும்:இப்போது மாவட்டத்தில் தென்னை, வாழை உள்ளிட்டப் பயிர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படுகிறது. அதுபோல் ரப்பர் விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர்.

### பாரம்பரிய வேளாண்மை பொருள்கள் பேரணி

கோவில்பட்டியில் வேளாண் துறை சார்பில் பாரம்பரிய வேளாண் பொருள்களின் முக்கியத்துவம் குறித்த பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பேரணியை கோவில்பட்டி பயணியர் விடுதி முன் எம்எல்ஏ கடம்பூர் செ. ராஜு கொடியசைத்துத் தொடக்கிவைத்தார். வேளாண் துணை இயக்குநர் குருமூர்த்தி, வேளாண் உதவி இயக்குநர்கள் மதியழகன், கருப்பசாமி, வேளாண் துறை அலுவலர் பாலமுருகன், துணை அலுவலர் மாசாணன், உதவி அலுவலர்கள் செந்தில்குமார், கபில்ராஜ், சரவணக்குமார், பரதாழ்வார், விவசாயிகள் பங்கேற்றனர். பேரணி, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நிறைவடைந்தது. அதிமுக முன்னாள் நகரச் செயலர் விஜயபாண்டியன், நகர எம்ஜிஆர் மன்ற இணைச் செயலர் கணேசன், நகர்மன்ற உறுப்பினர் ஜெமினி என்ற அருணாசலசாமி, ஊராட்சிச் செயலர் ரமேஷ், பேச்சாளர் மூர்த்தி பங்கேற்றனர்.

### உழவர் பெருவிழா

பழநி:பழநி அருகே அமரப்பூண்டி, மேலக்கோட்டை,வேப்பன்வலசு போன்ற ஊராட்சிகளில் உழவர் பெருவிழா நடந்தது.மாவட்ட மேலாண்மை இணை இயக்குனர் சம்பத் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர்கள் அமரப்பூண்டி செல்வி,வேப்பன்வலசு வெள்ளைச்சாமி முன்னிலை வகித்தனர். அமரப்பூண்டியில் சிறுதானியம் மற்றும் பாரம்பரிய வேளாண்

பொருட்களுக்கான விழிப்புணர்வு பேரணி நடந்தது. பழநி வேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி தலைமையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## வரத்து குறைந்ததால் தக்காளி விலை விர்...

ஆண்டிபட்டி:போதிய விளைச்சல் இல்லாததும், ஆந்திராவில் இருந்து வரத்து குறைந்துள்ளதாலும், தக்காளி விலை அதிகரித்து, ஒரு கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆண்டிபட்டி பகுதியில் திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.ராஜகோபாலன்பட்டி, அணைக்கரைப்பட்டி, வெள்ளையத்தேவன்பட்டி, புள்ளிமான்கோம்பை, பாலக்கோம்பை, ராயவேலூர், தெப்பம்பட்டி, சேவாநிலையம், அரப்படித்தேவன்பட்டி உட்பட பல கிராமங்களில் தக்காளி சாகுபடி உள்ளது. தற்போது இறவை பாசன நிலங்களில் நீர் மட்டம் குறைந்ததால் விவசாயிகள் பலர் சாகுபடி பரப்பை குறைத்துக்கொண்டனர்.கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு நடவு செய்த தக்காளி தற்போது மகசூல் தரும் நிலையில் உள்ளது. கடுமையான வெயிலால் பூக்கள், பிஞ்சுகள் பாதிப்படைந்து விளைச்சல் பாதித்துள்ளது.ரங்கராஜ், விவசாயி, திம்மரசநாயக்கனூர்: சீசன் காலங்களில் ஆண்டிபட்டி பகுதியில்50 டன் வரை வரத்து இருக்க வேண்டிய தக்காளி, தற்போது 3 டன் அளவுக்கு கூட இல்லை. மேலும் ஆந்திராவில் இருந்து தக்காளி வரத்து அதிகம் இருந்ததால், கடந்த ஆண்டு 20 கிலோ பெட்டி தரத்திற்கு தக்கபடி 200 ரூபாய் விலை போனது. ஆனால், தற்போது, ஆந்திராவில் இருந்து வரத்து குறைந்துள்ளது. இதனால், மார்க்கெட்டில் 20 கிலோ பெட்டி தரத்திற்கு தக்கபடி 500 முதல் 800 ரூபாய் வரை விலை போகிறது. சில்லரை விலையில் ஒரு கிலோ தக்காளி 60 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் விலை அதிகரிப்பால் பொதுமக்களும், போதிய விளைச்சல், சாகுபடி இல்லாததால் விவசாயிகளும் கவலையில் உள்ளனர்.

## விவசாயிகள் விரும்பும் திசு வாழை விவசாயம்

திருப்புவனம்:திருப்புவனம் பகுதியில் விவசாயிகள் விரும்பும் திசு வாழை நாற்றுப்பயிர்கள் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். விவசாயிகள் பெரும்பாலும், நெல், கரும்பு நடவு செய்தவர்கள், அதிலிருந்து மாறி மாற்றுப்பயிர் விவசாயத்தில் அக்கறை காட்டுவதில்லை. இதனை மாற்றவும், வேளாண் துறையில் புரட்சி ஏற்படுத்தவும் மாற்றுப்பயிர் நடவு விவசாயத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த முறைக்கு விவசாயிகள் முழுவதும் மாறாவிட்டாலும், கொஞ்சம் கொஞ்சமாக மாறிவருகின்றனர். வாழைக்கன்று நடவுக்கு பதில், மாற்றுப்பயிரான திசு வாழை நாற்று மூலம் நடவுக்கு விவசாயிகள் மாறிவருகின்றனர். இதற்கு சொட்டுநீர் பாசனம்

அமைக்க அரசு முழு மானியம் வழங்குகிறது. இதில் விவசாயம் செய்தவர்கள் நல்ல பலனை அடைந்துள்ளனர். வழக்கமான வாழையை விட குறைந்த உயரத்தில் வளரக்கூடியது. ஒரு தாருக்கு 150 காய்கள் வரை மகசூல் கிடைக்கும். தற்போது இந்த வாழைக்காய்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், திசு வாழை நடவு செய்ய விவசாயிகள் விரும்புகின்றனர்.விவசாயி ஒருவர் கூறுகையில், ""திசு வாழையில் அதிக காய்கள் காய்ப்பதால் நல்ல விலை கிடைக்கிறது. வேளாண் தோட்டக்கலை அலுவலகத்தில் திசு வாழை பயிர்கள் கிடைக்கவில்லை," என்றார்.தோட்டக்கலை அலுவலர் ஒருவர் கூறுகையில், ""தற்போது திசுவாழை பயிர்கள் கொடுக்க திட்டம் இல்லை. கடந்த ஆண்டு திசு வாழை பயிர்கள் கொடுத்தபோது, விவசாயிகள் யாரும் பயிரிட முன்வரவில்லை. திசுவாழைக்கு சொட்டுநீர் பாசனம் அவசியம். விவசாயிகள் விரும்பினால் திசு வாழை பயிர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார

## வேளாண் துறையில் பொருட்களுக்கு மொபைலில் விலை அறியும் வசதி

விருதுநகர்:""வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில், விவசாயிகளுக்கு மொபைல் போன் மூலம், சந்தை விலை விபரம், சந்தை நுண்ணறிவு விபரங்களை தெரியப்படுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது,"என, வேளாண் துணை இயக்குனர் முத்துமுனியாண்டி கூறினார். அவர் கூறுகையில்,"" திருச்சியில்,வேளாண் வணிகத்துறையின் சார்பில், வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விளை பொருட்களை லாபகரமாக சந்தைப்படுத்த முடியும். சந்தைப்படுத்துதல் தொடர்பு விபரங்கள் அடிப்படையில், விவசாயிகளின் சந்தை நுண்ணறிவு குறித்த விபரங்கள், மொபைலில் எஸ்.எம்.எஸ்., மூலம் அனுப்பப்படும். விவசாயிகள் தங்கள் மொபைல் எண்களை, வேளாண் வணிகத்துறை அலுவலர்களிடம் வழங்க வேண்டும், "என்றார்.

## மாந்தோப்புகளில் யானைகள் நடமாட்டம்... அதிகரிப்பு வழியின்றி தவிக்கும் ஸ்ரீவி., விவசாயிகள்

ஸ்ரீவில்லிப்புத்தூர்:மாந்தோப்புகளில் யானைகள் நடமாட்டம் அதிகரிப்பால், மாமரங்கள் சேதமடைவதால், விவசாயிகள் மிகுந்த மன வேதனையில் உள்ளனர். ஸ்ரீவி.,சாம்பல் நிற அணில் சரணாலயத்தில் ஏராளமான மான், யானை, காட்டெருமை, பன்றிகள் உள்ளன. மலை பகுதியில் தண்ணீர் இல்லாத காரணத்தால், வன விலங்குகள் தண்ணீர் தேடி வனப்பகுதியை யொட்டிய செண்பகதோப்பு, அத்தித்துண்டு, மம்சாபுரம், பிள்ளையார் நத்தம், மேலத்தொட்டியப்பட்டி கிராம விளைநிலங்களுக்கு புகுவது வழக்கம். கடந்த மாதம் ஓரிரு நாட்கள் பெய்த மழையால், வனப்பகுதி

பச்சை பசேலன காட்சியளிக்கிறது. இதனால் வனப்பகுதியையொட்டி விவசாயிகள் ஓரளவு நிம்மதியடைந்தனர். ஆனால் தற்போது மாம்பழம், பலா பழம் சீசன் துவங்கியுள்ளது. இதனால் இந்த பழங்களை சாப்பிடுவதற்காக, யானைகள் அதிகளவில் மாந்தோப்பிற்குள் நடமாட துவங்கியுள்ளது. யானைகள் பழங்களை சாப்பிடுவதோடு, மரக்கிளைகளை முறிப்பதோடு, அதன் பிஞ்சு காய்களையும் பறித்து சேதப்படுத்துகிறது. விவசாயிகள் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகின்றனர். வனத்துறையினரும் யானைகள் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். யானைகளிலிருந்து விளைநிலங்களை மீட்க வனத்துறை சார்பில், அகழி, சூரிய மின் வேலி போடப்பட்ட நிலையிலும், யானைகளின் நடமாட்டமும் அதிகரித்து வருகிறது. இதை தடுக்க வனத்துறைசார்பில் வழங்கப்படும் பட்டாசு அதிகரிக்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.விவசாயி ஒருவர் கூறுகையில்,"" மா, பலாப்பழங்களை சாப்பிட வரும் யானைகள், மரக்கிளைகளை முறித்து சேதத்தை விளைவிக்கிறது. இந்தாண்டு மா மரங்களில் விளைச்சல் குறைவாகவே உள்ளது. இந்த மாங்காய்களையாவது விற்கலாம் என்றால், யானைகளால் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி வருகிறோம்," என்றார்.

## கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற காங்கேயன் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடக்கோரி விவசாயிகள் சாலை மறியல்

முக்கூடல்:கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற காங்கேயன் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடக்கோரி விவசாயிகள் சாலை மறியல் நடத்தினர்.

கடனா அணைக்கட்டிலிருந்து காங்கேயன் கால்வாய் மூலம் பாப்பாக்குடி பகுதியில் 4 ஆயிரத்து 500 ஏக்கரில் நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களுக்குள் அறுவடை செய்ய வேண்டிய பருவத்தில் உள்ளது. ஆழ்வார்குறிச்சி மேல் பகுதி விவசாயிகள் ஒப்பந்தத்தை மீறி பயிர் நடவு செய்து, அறுவடைக்கு காத்திருக்கும் பயிருக்கு தண்ணீர் திறந்துவிட மறுப்பதாக தெரிகிறது. இதனால் நெற்பயிர் கருகும் நிலை உள்ளது. எனவே தண்ணீர் திறந்துவிடக்கோரி பாப்பாக்குடி பகுதி விவசாயிகள் இடைகால் விலக்கில் சாலை மறியல் நடத்தினர். தினமும் 100 கனஅடி வீதம் 10 நாட்களுக்கு மட்டும் தண்ணீர் திறந்துவிட்டால் போதும் என்று விவசாயிகள் தெரிவித்து மறியல் செய்தனர்.

இதனால் அரைமணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அம்பை டிஎஸ்பி மணிமாறன், ஆலங்குளம் டிஎஸ்பி லயோலா இக்னேஷியஸ் ஆகியோர் தலைமையில் போலீசார் மறியல் செய்த 68 பெண்கள் உட்பட சுமார் 450பேரை கைது செய்து பொதுக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் தங்க வைத்தனர். இதனால் இடைகால் பகுதியில் பரபரப்பான ‹ழ்நிலை காணப்பட்டது. தண்ணீர் திறந்துவிட அரசு முயற்சி எடுக்காத நிலையில் தொடர்ந்து போராட்டம் நடத்தப்போவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## தென்காசியில் காய்கறி வரத்துகள் குறைவு "கிடுகிடு' வென விலை உயர்வு

தென்காசி:காய்கறி வரத்துகள் வெகுவாக குறைந்துவிட்டதால், தென்காசி மார்க்கெட்டில், காய்கறி விலை "கிடுகிடு' வென உயர்ந்து வருகின்றன.

தென்காசி மார்க்கெட்டிற்கு பாவூர்சத்திரம், சுரண்டை, கீழப்பாவூர், அத்தியூத்து, கல்லூத்து மற்றும் சுற்றுவட்டார பகுதி கிராமங்களில் இருந்து கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலைங்காய் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. மேலும் சேலம், மதுரை, ஒட்டன் சத்திரம் உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்தும் காய்கறிகள் குவிந்த வண்ணம் இருந்தன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக தென்காசி காய்கறி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்துகள் குறைவாக வந்த வண்ணம் உள்ளன. இதன் காரணமாக கடந்த 3 நாட்களாக காய்கறிகளின் விலைகள் ஏற்றம்,இறக்கம் கண்டு வருகின்றன.

கத்தரிக்காய் ரூ.50, தக்காளி 40, உள்ளி ரூ.50 முதல் 60, பல்லாரி 20, புடலை 20, கோஸ் 18, உருளை 20, கேரட் 45 முதல் 50, வெண்டைக்காய் 15, மிளகாய் 40, பீன்ஸ் 50, பட்டர் பீன்ஸ் 100, காலிபிளவர் 50, பாகற்காய் 25, இஞ்சி ரூ200க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த விலையேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறுகையில்,""சில நாட்களாக மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்துகள் வெகுவாக குறைந்துவிட்டன. கீழப்பாவூர், அத்தியூத்து கிராமங்களில் இருந்து காய்கறிகள் வந்தன. சில நாட்களாக அதுவும் குறைந்துவிட்டது.போதிய மழை இல்லாததால் விளைச்சல் குறைந்துவிட்டது. விளைச்சல் இல்லாததால் வரத்துகள் இல்லை. இதனால் சில நாட்களாகவே காய்கறிகளின் விலை அதிகரித்து வருகின்றன. இன்னும் சில நாட்கள் இதே நிலை நீடிக்கலாம்."என்றார்.

## காய்கறி பயிரிட 50 சதவீத விதை மானியம் ஈரோடு வட்டார வேளாண் அலுவலர் தகவல்

ஈரோடு ;ஈரோடு வட்டாரத்தில், 64 வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளன.
காலிங்காராயன், எல்.பி.பி., வாய்க்கால், கிணற்றுப்பாசனம் மூலம், விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, மஞ்சளும், வறட்சி காலத்தில் குறுகிய கால பயிர்களாக சோளம், மக்காச்சோளம், உளுந்து, எள், துவரை உள்ளிட்ட பயறு வகைகளையும், சிலர் காய்கறிகளையும் பயிரிட்டு வருகின்றனர்.

விவசாயிகளுக்கு உதவிடும் நோக்கில், வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம், நெல், கடலை, எள், தானிய வகைகள் பயிரிட, 5 முதல், 50 சதவீதம் வரையிலான மானியத்துடன் விதைகள் வழங்கப்படுகிறது. கடந்தாண்டு போதிய மழையின்மையால் நெல் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்தனர்.

அதிகப்படியாக கரும்பு, சோளம் ஆகியவற்றை பயிரிட்டனர். இந்நிலையில் நடப்பாண்டு வாய்க்காலில் தண்ணீர் திறப்புக்காக விவசாயிகள் காத்திருக்கின்றனர். வேளாண் விரிவாக்க அதிகாரிகளும், குறுகிய கால, நீண்ட கால பயிர்களுக்கான விதையை தயார் இருப்பில் வைத்துள்ளனர்.

இதுகுறித்து ஈரோடு வேளாண் விரிவாக்க அலுவலர் கூறியதாவது: ஈரோடு வட்டார பகுதியில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடுவது வழக்கமாக உள்ளது. நடப்பாண்டு பயிரிடுவதற்கான விதை நெல், 50 டன், கடலை, 10 டன், எள், உளுந்து தலா, 2 டன், தவிர காய்கறி விதைகள் கையிருப்பில் தயாராக உள்ளது.

வறட்சியால் தண்ணீர் பிரச்னை காரணமாக குறுகிய கால பயிர்களை விவசாயிகள் அதிகம் பயிரிடுவர். 60 நாட்களில் விளைச்சலை வழங்கும், உளுந்து, துவரை, காய்கறிகளான புடலை, பீர்க்கை உள்ளிட்டவை பயிரிடலாம். நெல் விதைக்கு கிலோவுக்கு, 5 ரூபாய்யும், கடலை, எள், உளுந்து, துவரை உள்ளிட்ட தானிய வகைகளுக்கு, 10 முதல், 12 ரூபாய் வரையிலும், காய்கறி விதைகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது, என்றார்.

## விவசாயிகளுக்கு அடையாள அட்டை

ஊட்டி:உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்க ஆயுள் கால உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை:விவசாயம் தொடர்பான அனைத்து செயல்பாடுகளுக்கும், அரசு துறைகளில் விளக்கங்கள் பெற வேண்டி உள்ளதால், சங்க ஆயுள் உறுப்பினர்களுக்கு, இலவச அடையாள அட்டை வழங்கப்பட்டு

வருகிறது. இதனை பெறாத விவசாயிகள் பாஸ்போட் சைஸ் போட்டோவுடன் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

### தண்ணீரின்றி கருகும் நெற்பயிர்: விவசாயிகள் கண்ணீர்

ஸ்ரீபெரும்புதூர் : பிள்ளைப்பாக்கம் ஏரி வறண்டதால், 700 ஏக்கரில் பயிரிட்டுள்ள நெற்பயிர்கள் கருகி வருகின்றன. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பாதிப்பிற்கு உரிய நிவாரணத்தை, அரசு வழங்க வேண்டும் என, அவர்கள் கோரி உள்ளனர்.

பயிர்களை காக்க, விவசாயிகள், டிராக்டர் மூலம் தண்ணீரை பாய்ச்சி வருகின்றனர்.

ஸ்ரீபெரும்புதூர் அடுத்த பிள்ளைப்பாக்கம் ஏரி உள்ளது. இதன் ஆழம் 16 அடியாகும். ஏரியில் இருந்து விவசாயத்திற்கு தண்ணீரை வெளியேற்ற 7 மதகுகள் உள்ளன. இதன் மூலம், 444 ஹெக்டேர் பரப்பில் விவசாயிகள் நெற்பயிரை சாகுபடி செய்கின்றனர்.

காப்பாற்ற முயற்சி

கடந்த ஜனவரி மாதம் விவசாயிகள் ஏடிடி17 ரக நெற்பயிரை, 700 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டுள்ளனர். கோடை வெயிலால் ஏரியில் இருந்த தண்ணீர் குறைந்து காணப்படுகிறது. இதனால், அனைத்து பயிர்களும் கதிர் வரும் பருவத்தில் உள்ளன. இந்நிலையில் ஏரியில் தண்ணீர் முழுவதும் வறண்டதால், குட்டைகளில் இருந்து, டிராக்டர் டேங்கர் மூலம் தண்ணீரை விவசாயிகள் எடுத்து வந்து, தண்ணீரை பாய்ச்சி வருகின்றனர்.

பயிரை காக்க வேண்டி, ஆயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்து, கடன் தொல்லையில் சிக்கி, விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே, தண்ணீரின்றி கருகிய பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும் என, அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

நிவாரணம் தேவை

இதுகுறித்து, ஏரி பாசன சங்க தலைவர் லட்சமணன் கூறுகையில், ""ஏரி நீரை பயன்படுத்தி தான், விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது, வரத்துக் கால்வாய் தூர்ந்ததால், ஏரி நிரம்பவில்லை. இதனால், நவரை பருவத்தில், சாகுபடி செய்த, நெற்பயிர்கள் கருகுகின்றன. சில நிலங்களில் நெற்கதிர்கள் பதராகி விட்டன. எனவே, டெல்டா விவசாயிகளுக்கு, நஷ்ட ஈடு வழங்குவது போல, எங்கள் கிராம விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்,'' என்றார்.

### சொட்டுநீர் பாசனத்தில் வெண்டை பயிர்

செய்யூர் : சொட்டுநீர் பாசனம் மூலம் வெண்டை பயிர் செய்தால், மூன்று மடங்கு லாபம் பெறலாம் என, விவசாயி தெரிவித்தார். லத்தூர் ஒன்றியத்தில் உள்ளது பச்சம்பாக்கம் கிராமம். இங்குள்ள

மக்கள், பெரும்பாலும் விவசாய தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சில ஆண்டுகளாக, இங்கு நிலத்தடி நீர் குறைந்து போனது. இதனால், நெல்லுக்கு பதிலாக விவசாயிகள் காய்கறி பயிரிட்டு வருகின்றனர்.

சொட்டுநீர்

கடந்த சில ஆண்டுகளாக, காய்கறி பயிர் செய்து வரும், விவசாயி வேதகிரி கூறியதாவது:

எனக்கு சொந்தமாக, 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதுதவிர, 3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, சாகுபடி செய்கிறேன்.

கிணற்றில், போதிய தண்ணீர் இல்லாததால், கடந்த சில ஆண்டுகளாக வேர்க்கடலை, தர்பூசணி, கிர்ணி பழம், கத்தரி, வெண்டை போன்றவற்றை பயிர் செய்து வருகிறேன். தற்போது, 50 சென்ட் நிலத்தில் கத்தரியும், 50 சென்ட் நிலத்தில் வெண்டை போன்றவைகளை சொட்டுநீர் பாசனம் மூலம் செய்து வருகிறேன்.

பூச்சிகள் இல்லை

வெண்டையில் அதிக லாபம் கிடைப்பதால், தொடர்ந்து அதை பயிரிடுகிறேன். இடைவெளி விட்டு நடவு செய்தால், பூச்சிகள் தாக்குவதில்லை. 50 சென்ட் நிலத்தில் நடவு செய்யப்பட்ட வெண்டை செடியில் இருந்து, இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, 100 கிலோ காய் கிடைக்கும். ஒரு கிலோ வெண்டை, சாதாரண நாட்களில், 10 ரூபாய்க்கும், விசேஷ நாட்களில், 20 ரூபாய்க்குள் விலை போகிறது.

வெண்டை செடி, மூன்று மாதம் வரை காய்க்கும். அதன்பின் செடிகளை அறுத்துவிட்டு, மருந்து வைத்து பராமரித்தால் மீண்டும், மூன்று மாதத்திற்கு காய் காய்க்கும். இதன் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கிறது. மாதத்திற்கு, 15 ஆயிரத்திற்கு குறையாமல் வருமானம் பார்க்கலாம். இவ்வாறு வேதகிரி தெரிவித்தார்.

## நெல் மகசூலில் சாதனை செய்த விவசாயிக்கு பரிசளிப்பு

செஞ்சி:ஏக்கருக்கு 48 மூட்டை நெல் மகசூல் எடுத்த விவசாயிக்கு 5 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டது.வல்லம் ஒன்றியம் வடபுத்தூர் மற்றும் கொரவனந்தல் கிராமங்களில் உழவர் திருவிழா நடந்தது.ஒன்றிய சேர்மன் அண்ணாதுரை தலைமை தாங்கினார். அட்மா தலைவர் பன்னீர் செல்வம் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இதில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் நடுவர்கள் முன்னிலையில் நடந்த அறுவடையில்

மாவட்டத்தில் ஏக்கருக்கு 48 மூட்டை நெல் மகசூல் செய்த கடம்பூர் கிராம விவசாயி ஏழுமலைக்கு 5,000 ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

எதிர்காலத்தில் வறட்சியை தாங்கிட விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகளை தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் அமைத்து தரப்படும் என அறிவித்தனர்.

வேளாண்மை பொறியியல் துறை உதவி பொரியாளர் கலியமூர்த்தி, வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜன், உதவி வேளாண்மை அலுவலர் ரவி, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ரவிச்சந்திரன், அறிவழகன், அட்மா திட்ட பொருள் சிறப்பறிஞர் பாரி ஆகியோர் பங்கேற்றனர்.

## கடும் வறட்சியால் கருகும் மரங்கள்விவசாயிகள் வேதனை

மேட்டூர்: கொளத்தூர் மலையடிவார கிராமங்களில் நீடிக்கும் கடும் வறட்சியால், 500க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் கருகி விட்டது. ஒரே கிராமத்தில் கருகிய, 100க்கும் மேற்பட்ட தென்னைகளை விவசாயிகள் வெட்டி வீழ்த்தியுள்ளனர்.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில், பச்சபாலமலை அடிவாரத்தில் லக்கம்பட்டி, தண்டா, நீதிபுரம், தார்க்காடு உள்ளிட்ட கிராமங்கள் உள்ளது. இப்பகுதியில் நிலத்தடி நீரை பயன்படுத்தி விவசாயிகள் வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்கின்றனர்.

பெரும்பாலான விவசாயிகள், தோட்டம் மற்றும் நிலத்தை சுற்றிலும் தென்னை சாகுபடி செய்துள்ளனர். மலையடிவார கிராமங்களில் மட்டும், 2,000க்கும் மேற்பட்ட தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 20 ஆண்டுக்கு பின் நடப்பாண்டு கொளத்தூர் சுற்றுப்பகுதியில், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.

தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கும் நிலத்தில், பயிர் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். வறட்சி காரணமாக நிலத்தை சுற்றிலும் சாகுபடி செய்த தென்னை மரங்களும் கருகி விட்டது. இதுவரை, 500க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் கருகியுள்ளது.

லக்கம்பட்டி பஞ்சாயத்தில் ஒரே பகுதியில், 100க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் கருகி விட்டது. விரக்தியடைந்த விவசாயிகள், தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியுள்ளனர்.

விவசாயத்துக்கு சொட்டு சொட்டாக பயன்படுத்துவதற்கு கூட நிலத்தடி நீர் போதுமானதாக இல்லாததால், சாகுபடி செய்த வாழைகள் தளிர் விடுவதற்கு முன்பே கருகி விட்டது. வறட்சி காரணமாக வாழை, மஞ்சள் உள்பட பயிர்கள் சாகுபடி செய்ய முடியாத நிலையில், நீண்டகால பலன் கொடுக்கு தென்னை, மா, பனை போன்ற மரங்களும் கருகுவது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

## ரூ.56 கோடி வறட்சி நிவாரண நிதி ஒதுக்கீடு: தமிழக அமைச்சர் தகவல்

நாமக்கல்: ""மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வறட்சி நிவாரண நிதியாக, 56 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது," என, தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கமணி கூறினார்.

நாமக்கல் அடுத்த எருமப்பட்டி யூனியன், வடவத்தூர், முட்டாஞ்செட்டி, வரகூர், எஸ்.பழையபாளையம் ஆகிய பஞ்சாயத்துகளில், தமிழக அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் விழா நடந்தது.

நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார். தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கமணி, 4,384 பயனாளிகளுக்கு விலையில்லா பொருட்களை வழங்கி பேசியதாவது:

மாவட்டத்தில், இதுவரை, ஒரு லட்சத்து, 19 ஆயிரத்து, 141 இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் மதிப்பு, 61.23 கோடி ரூபாய்.

தமிழக முதல்வர், பள்ளி மாணவ, மாணவியரின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்துள்ளார்.

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, இத்தகைய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, இந்த ஆண்டு, 16 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில், அடிப்படை வசதியை நிறைவேற்றும் வகையில், நாமக்கல் மாவட்டத்தில், 113 பஞ்சாயத்துகளில், தாய் திட்டத்தின் கீழ், அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்னையை கருத்தில் கொண்டு, குடிநீர் பணிக்கு முக்கியத்துவம் அளித்து, தேவையான இடங்களில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தும், மின்மோட்டார் பழுது ஏற்பட்டால், உடனடியாக சரி செய்யவும், பைப் லைன் விஸ்தரிப்பு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வரால், நாமக்கல் மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வறட்சி நிவாரண நிதி, 56 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

எம்.எல்.ஏ., பாஸ்கர், ஆர்.டி.ஓ., அஜய் யாதவ், மாவட்ட பஞ்சாயத்து சேர்மன் காந்திமுருகேசன், துணைத் தலைவர் பழனிவேல், மாவட்ட கவுன்சிலர் சந்திரன், யூனியன் சேர்மன்கள் ஜெகதீசன்,

சந்திரசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தரராஜன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## வாழை, கரும்பு பயிருக்கு நிவாரணம் மத்திய அமைச்சர் வாசன் பேட்டி

நாமக்கல்: ""நெல்லுக்கு நிவாரணம் வழங்குவதுபோல், வாழை, கரும்பு பயிர்களுக்கும் வழங்க வேண்டும்," என, மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் வாசன், கூறினார்.

நாமக்கல்லில், நிருபர்களிடம், அவர் கூறியதாவது:

மத்திய அரசு, கல்வி, சுகாதாரம், தொலை தொடர்பு வசதி, பாதுகாப்பு, குடிநீர், வங்கிக்கடன் இலக்கு, மத்திய உணவுத் திட்டம், ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் உள்ளிட்ட திட்டங்களுக்கு, பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது.

இலவச கல்வி உரிமைச் சட்டத்தை பொறுத்தவரை, முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆறு முதல், 14 வயது வரை, 1.16 கோடி பேர் கல்வி கற்க பள்ளியில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாலைபோக்குவரத்தில், பல மாநிலங்களைவிட தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில், ஐந்து கோடி ஏழை மக்கள் பயன்பெற்று வருகின்றனர். பாராளுமன்றத்தை முழுமையாக நடத்தவிடாமல் எதிர் கட்சிகள் முடக்கியதால், இந்தியாவின் முக்கிய பிரச்னைகளை விவாதிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

தமிழகத்தில், வறட்சி காரணமாக, பல பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, டெல்டா மாவட்டங்களில், மத்திய அரசு குழு பார்வையிட்டு அறிக்கை அனுப்பி, பின், நிவாரணம் வழங்க, தமிழக காங்கிரஸ் சார்பில் வலியுறுத்தப்படும். நெல்லுக்கு நிவாரணம் வழங்குவதுபோல், வாழை, கரும்பு பயிர்களுக்கும் வழங்க வேண்டும்.

இலங்கை சிறையில் இருக்கும் தமிழக, புதுச்சேரி மீனவர்களை விடுதலை செய்யக்கோரி, வெளியுறவுத்துறை அமைச்சர், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சரிடம் பேசியுள்ளார்.

மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அதற்காக காங்கிரஸ் கட்சி முயற்சி மேற்கொள்ளும். சேது சமுத்திரம் திட்டத்தை பொறுத்தவரை செயல்படுத்த வேண்டும் என்பதே மத்திய அரசின் நோக்கம்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னாள் எம்.பி., கார்வேந்தன், முன்னாள் எம்.எல்.ஏ., விடியல் சேகர், முன்னாள் இளைஞரணி மாநிலத் தலைவர் யுவராஜா உள்ளிடோர் உடன் இருந்தனர்.

## துவரை உற்பத்தி சரிவு

தர்மபுரி: துவரை உற்பத்தி ஆண்டுக்கு, ஆண்டு குறைந்து வருவதால் தேசிய சராசரியை விட குறைந்து வருகிறது.

தோட்டக்கலைத்துறை இணைஇயக்குனர் மனோகரன் கூறியது:

துவரை உற்பத்தி தேசிய சராசரி அளவவை விட தமிழகத்தில் மிகவும் குறைவாக உள்ளது. இதற்கு காரணம் போதிய பருவமழையில்லாதது. விவசாயிகள் குறைந்த மகசூல்களை தரக்கூடிய உள்ளூர் ரகங்களை பயிரிடுதல் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை முறைகள், மண்வள மேம்பாட்டு முறைகளை சரியாக பின்பற்றாதது, விதைப்பிற்கு அதிகளவு விதைகளை உபயோகிப்பது, நவீன சாகுபடி தொழில்நுட்பங்களை பின்பற்றாதது, ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகளை கடைபிடிக்க தவறுவது உள்ளிட்டவைகள் காரணங்களாகும்.

துவரை சாகுபடியில் விவசாயிகள் அதிக மகசூல் பெற துவரை சாகுபடி செய்யும் நிலங்களை, இரண்டு முதல், மூன்று முறை ஆழமாக உழவு செய்வதன் மூலம் நிலவளம் மேம்படுத்தப்பட்டு நோய் தாக்குதல் குறைவதுடன், களை கட்டுப்படுத்தப்படுகிறது.

மேலும், மழைக்காலங்களில் நிலத்தில் இருந்து மழைநீரில் வளமான மண் அரித்து செல்லப்படுவது தடுக்கப்படுகிறது. துவரையை நேரடி விதைப்பு செய்யாமல், நாற்று நடவு தொழில் நுட்பத்தின் மூலம் நடவு செய்வதன் மூலம், ஒரு ஏக்கருக்கு, ஒரு கிலோ விதை போதுமானது.

துவரை நாற்று நடவு தொழில்நுட்பத்தின் மூலம் அதிக மகசூல் பெற முடியும். இதன் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் துவரை மகசூலை அதிகரிப்பதன் மூலம் விசாயிகள் அதிக லாபம் பெறலாம். துவரை நாற்று நடவு குறித்த விபரங்களை அருகில் உள்ள வேளாண் உதவி அலுவலங்கள் மற்றும் வேளாண் அலுவலங்களில் விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு கூறினார்.

## விளைச்சல் இனிக்குது...விலை கசக்குது... மாம்பழ விவசாயிகள் புலம்பல்

பேரையூர்:"பேரையூர் தாலுகாவில் மாங்காய் விளைச்சல் அமோகமாக இருந்தும் முழுமையாக பருக்காததால், விலை போகவில்லை,' என, விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.இத்தாலுகாவில், பேரையூர், சாப்டூர், பழையூர் உட்பட 200 ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன. இந்தாண்டு மாங்காய் விளைச்சல் அமோகமாக இருந்தும், மகசூலுக்கு தேவையான மழை இல்லை. இதனால், மரங்களில் பாதியளவில் விளைந்த மாங்காய்கள் ஏராளமாக காய்த்து குலுங்குகின்றன. 50 சதவீதமே காய்கள் அளவு பருத்துள்ளதால், விவசாயிகள் எதிர்பார்த்த விலைக்கு விற்க முடியவில்லை. மாங்காய்களை பறித்து விற்றால், பறிப்புக் கூலிக்கு தாங்கவில்லை என புலம்புகின்றனர்.இதனால், பறிக்காமல் மரத்திலேயே மாங்காய்களை

விட்டுவிட்டனர். இதனால், பாதி விளைந்த நிலையில் காற்றுக்கு கீழே விழும் காய்களை எடுத்து, கிலோ ரூ.4 வரை விற்கின்றனர். இதனால், பல தோப்புகளில் வாங்கி ஆளின்றி காய்கள் சிதறிக் கிடக்கின்றன.கிருஷ்ணமூர்த்தி, சாப்டூர்: நான்கு ஏக்கர் மாந்தோப்பை குத்தகைக்கு எடுத்துள்ளேன். விளைச்சல் அதிகம் இருந்தாலும், காய்கள் பருக்கவில்லை. காய்களை பறிக்க ஒரு ஆளுக்கு ரூ.300 கூலி தர வேண்டியுள்ளது. சந்தைக்கு கொண்டு சென்றால், ஏற்று மற்றும் இறக்கு கூலி உள்ளது. மாங்காய் கிலோ ரூ.4க்கு விற்பதால், பறிப்புக் கூலி கூட கொடுக்க முடியவில்லை. இதனால், பறிக்காமல் விட்டுவிட்டேன்.நாகையசாமி,பழையூர்: மழை இல்லாததால், நன்றாக விளைந்து வந்த காய்கள் சுருங்கி விட்டன. 20 ஏக்கரில் தோப்பு குத்தகைக்கு எடுத்துள்ளேன். விளைச்சல் இந்தாண்டு கை விட்டு விட்டது. பறிப்புக் கூலிக்கே மாங்காய் தேறாததால், காற்றில் தானாகவே விழுகின்றன. இரவில் மலை பன்றிகள், காட்டு எருமைகள் காய்களை தின்கின்றன, என்றனர்

## வறட்சி நிவாரணதொகை முறையாக சென்றடைகிறதா என்பதை அறிய ஆய்வு

திண்டுக்கல்:விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை, குளறுபடி நடக்காமல் முறையாக சென்றடைகிறதா என்பதை ஆய்வு மேற்கொள்ள வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கு, கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சி குறித்து அமைச்சர் குழு ஆத்தூர், ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டது. இதையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க மாநில அரசு திண்டுக்கல் மாவட்டத்திற்கு ரூ.60 கோடியை ஒதுக்கியது. மாவட்டத்தில் கணக்கெடுப்புபடி ரூ.52 கோடி வரை நிவாரணம் வழங்கப்படவுள்ளது.பாதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டியலை தயார் செய்து அந்தந்த பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவரவர் வங்கிக்கணக்கில் நிவாரணத்தொகை செலுத்தப்படுகிறது.நிவாரணத்தொகை முறையாக சென்றடைகிறதா என்பதை ஆய்வு செய்ய கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டுள்ளார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கார்த்திகேயன், ஒட்டன்சத்திரம், பழநி பகுதிகளில் உள்ள தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்களில் ஆய்வு மேற்கொண்டார். விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தொகை முறையாக அவரவர் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை கேட்டறிந்து ஆவணங்களை சரிபார்த்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.05.2013 A.M**

---

## 4 மாத இடைவெளிக்கு பிறகு நீலகிரி டீத்தூள் ஏலத்தில் பாக். வர்த்தகர்கள் பங்கேற்பு



குன்னூர் : நான்கு மாத இடைவெளிக்கு பிறகு பாகிஸ்தான் வர்த்தகர்கள் குன்னூர் ஏலத்தில் பங்கேற்றதால் டீத்தூளுக்கு கணிசமான விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரி உட்பட தென்னிந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலைத்தூளை பாகிஸ்தான் வர்த்தகர்கள் அதிகளவில் கொள்முதல் செய்கின்றனர். முக்கியமாக குன்னூரில் நடைபெறும் அரசு மற்றும் தனியார் ஏல மையங்களில் பங்கேற்று தேயிலைத்தூள் கொள்முதல் செய்து வந்தனர்.

எல்லையில் இந்திய வீரர்கள் இருவர் கொல்லப் பட்டதால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு பாகிஸ்தான் வர்த்தகர்கள் இந்தியாவுக்கு வருவது தடைபட்டது. இதனால் இந்திய தேயிலை வர்த்தகம் பாதிக்கப்பட்டது. தற்போது நிலைமை மெல்ல மெல்ல சீரடைந்துள்ளது. இதன் எதிரொலியாக, 4 மாதங்களுக்கு பிறகு குன்னூரில் நடந்த தேயிலைத்தூள் ஏலத்தில் பாகிஸ்தான் வர்த்தகர்கள் பங்கேற்று ஆர்வத்துடன் தேயிலை கொள்முதல் செய்தனர்.

சிடிடிஏ மையத்தில் நடந்த ஏலத்தில், அனைத்து ரக தூளுக்கும் கிலோவுக்கு ரூ.2 விலை சரிவு ஏற்பட்டாலும், இலை ரகத்தை பாகிஸ்தான் வர்த்தகர்கள் சராசரியாக கிலோ ரூ.77.90க்கு கொள்முதல் செய்தனர். வரும் வாரங்களில் இதன் விலை மேலும் அதிகரிக்கும். டஸ்ட் ரகத்தை கொள்முதல் செய்யும்போது கணிசமாக விலை உயர வாய்ப்புள்ளதாக உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## கயிறு, கயிறு பொருட்கள் ஏற்றுமதி ரூ 1116 கோடியை எட்டியது



கொச்சி: கயிறு வாரிய தலைவர் ஜி.பாலசந்திரன் கூறியதாவது: கயிறு மற்றும் கயிறு பொருட்கள் ஏற்றுமதி 2011,12ம் ஆண்டில் 4,10,854 டன்னாக இருந்தது. இது 2012,13ம் ஆண்டில் 5% அதிகரித்து 4,29,500 டன்னாக உள்ளது. இதன் மதிப்பு ரூ 1,116 கோடியாகும். இது முந்தைய ஆண்டில் ரூ 1,052.6 கோடியாக இருந்தது. ஏற்றுமதியாகும் கயிறு பொருட்களில் 76 சதவீதம் மரபு சாரா பொருட்களாகும். கயிறு பொருட்கள் மொத்தம் 112 நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அமெரிக்காவுக்கு மட்டும் 22.8 சதவீதம் மதிப்பிலான பொருட்களும், சீனாவுக்கு 19.4 சதவீத பொருட்களும் ஏற்றுமதியாகின்றன. தமிழகத்திலிருந்து ரூ 474.92 கோடி மதிப்பிலான 3,53,533.78 கோடி கயிறு பொருட்களும், கேரளா மாநிலத்திலிருந்து ரூ 636.84 கோடி மதிப்பிலான 71,284 டன் கயிறு பொருட்களும், மற்ற மாநிலங்களிலிருந்து ரூ 14.27 கோடி மதிப்பிலான 4,682.66 டன் பொருட்களும் ஏற்றுமதியாகின்றன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.05.2013 A.M**

## திறந்தவெளியில் கோதுமை ஏற்றுமதி செய்தால் அரசுக்கு ரூ.25,000 கோடி கிடைக்கும்

புதுடெல்லி

இந்திய உணவு கழகத்தின் தானிய கிடங்குகளில் கோதுமை திறந்தவெளியில் பாதுகாக்கப்படுகிறது. இதில் 1.70 கோடி டன் கோதுமையை மட்டும் ஏற்றுமதி செய்தாலே மத்திய அரசுக்கு ரூ.25,000 கோடி வருவாய் கிடைக்கும் என அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் 5,000 கோடி டாலர் அளவிற்கு வேளாண் விளைபொருள்களை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. கோதுமை ஏற்றுமதியால் இந்த இலக்கை எட்டுவது எளிதாக இருக்கும் என்பதுடன், நடப்பு கணக்கு பற்றாக்குறையும் குறைய வாய்ப்புள்ளது என்பதை அசோசெம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த நிதி ஆண்டில் (2012–13) 3,354 கோடி டாலருக்கு வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. விளைபொருள்கள் ஏற்றுமதியை அதிகரிப்பதால் உள்நாட்டில் பல்வேறு வகையான பயிர்கள் சாகுபடி ஊக்கம் பெறுவதுடன், உற்பத்தி திறனும் அதிகரிக்கும். இதனால் உலக நாடுகளுக்கு அதிகம் தேவைப்படும் முக்கிய பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிகம் கவனம் செலுத்துவார்கள் என அசோசெம் தெரிவித்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.04.2013 A.M**

---

## வறட்சியால் பாதிக்கப்பட்ட 2¼ லட்சம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு

ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்டத் தில் வறட்சியால் நெல் விவசாயம் பாதிக்கப் பட்ட சுமார் 2¼ லட்சம் விவசாயிகளுக்கு நிவார ணம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யபப்பட்டுள்ளது.

நீர் ஆதாரம்

தமிழகத்தில் வறண்ட மாவட்டம் என்று பெயர் பெற்ற ராமநாதபுரம் மாவட் டத்தின் நீர் ஆதாரம் வட கிழக்கு பருவமழையும், வைகை தண்ணீரும்தான். கடந்த கால வரலாறுகளில் இந்த நீர் ஆதாரங்கள் பெயரள விலேயே சொல்லப்பட்டு வருகின்றன. இதற்கு கார ணம் இந்த இரண்டுமே இந்த மாவட்ட மக்களுக்கு நிலையான பயனை அளிப்ப தில்லை. வைகை தண்ணீர் வராமல் கெடுத்து விடும். வட கிழக்கு பருவமழை பெய்து கெடுத்துவிடும். இது போன்ற சூழ்நிலையில் விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் நம்பிக் கையின் அடிப்படையில் விவ சாயம் செய்வதும், தண்ணீர் இல்லாமல் வறட்சியில் சிக் கிக்கொள்வதும் ஆண் டாண்டு காலமாக வழக்கத் தில் இருந்து வருகிறது.

ராமநாதபுரம் மாவட்டத் தில் கடந்த 70 ஆண்டு கால வரலாற்றில் குளிர்காலத்தில் 67.40 மில்லி மீட்டரும், கோடை காலத்தில் 122.70 மில்லி மீட்டரும், தென்மேற்கு பருவமழை 135.30 மில்லி மீட் டரும், வடகிழக்கு பருவ மழை 501.60 மில்லி மீட்டரு மாக மொத்தம் 827 மில்லி மீட்டர் ஆண்டு சராசரி மழை யளவாக உள்ளது. கடந்த 2010ம் ஆண்டுதான் வட கிழக்கு பருவமழை அதிகள வாக 838.94 மில்லி மீட்ட ரும், ஆண்டு சராசரி 1186 மில்லி மீட்டரும் பெய்தது. இதேபோல மிகக்குறைந்த அளவாக கடந்த 2003ம் ஆண்டு வடகிழக்கு பருவ மழை 393.80 மில்லி மீட்ட ரும், ஆண்டு சராசரி 566.90 மில்லி மீட்டரும் பெய்து கடும் வறட்சியை சந்தித்தது.

பயிர் காப்பீடு

இதற்கு அடுத்தாற்போல் கடந்த ஆண்டு 449.37 மில்லி மீட்டர் வடகிழக்கு பருவமழை யும், 598.54 மில்லி மீட்டர் ஆண்டு சராசரி மழையும் பெய்து இம்மாவட்ட மக்க ளின் விவசாய நம்பிக்கையை பொய்யாக்கியது. போதிய மழை பெய்யாததால் விவசா யத்திற்கு மட்டுமின்றி குடிநீர் தேவைக்கும் தண்ணீர் இல் லாமல் போய்விட்டது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் 93 ஆயிரத்து 602 விவசாயிகள் ரூ.214 கோடியே 43 லட்சத் துக்கு பயிர்காப்பீடு செய்துள் ளனர்.

கடந்த 201112ம் ஆண்டில் 851 விவாசாயிகள் ரூ.53 கோடியே ரூ.39¾ லட்சத்துக்கு மட்டுமே பயிர் காப்பீடு செய் திருந்தனர். இதேபோல கடந்த ஆண்டு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 435 மிளகாய் விவ சாயிகள் ரூ.14 கோடியே 72 லட்சத்து 90 ஆயிரத்துக்கு பயிர் காப்பீடு செய்துள்ளனர். தமிழக அரசு 50 சதவீதத்துக்கு மேல் வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரண தொகை அறிவித்துள்ளது. இதன்படி ராமநாதபுரம் மாவட்டத்தில் 2 லட்சத்து 24 ஆயிரத்து 817 விவசாயிகளுக்கு ரூ.131 கோடியே 68 லட்சத்து 36 ஆயிரத்து 990 ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது. நிவாரண தொகையினை சம்பந்தப் பட்ட விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள கூட்டுறவு

சங்கங்களில் பெற்றுக்கொள் ளலாம்.

## கிருஷ்ணகிரி அருகே உழவர் பெருவிழாவில் பாரம்பரிய வேளாண்மை பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஊர்வலம்

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி அருகே உள்ள ஜிஞ்சம்பள்ளியில் நடைபெற்ற உழவர்பெருவிழாவில் பாரம்பரிய வேளாண்மை பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. இதில் அரசு அலுவலர்கள் விவசாயிகள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினர் கலந்து கொண்டார்கள்.

**உழவர் பெருவிழா**

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கடந்த மாதம் 14ந் தேதி முதல் உழவர் பெருவிழா நடைபெற்று வருகிறது. இதில் நவீன சாகுபடி குறித்தும் வேளாண்மைக்கு அரசு வழங்கும் சலுகைகள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கி கூறப்படுகிறது.

அந்த வகையில் கிருஷ்ணகிரி அருகே உள்ள ஜிஞ்சம்ப்பள்ளியில் உழவர் பெருவிழா நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் சுகுணா தலை மை தாங்கினார். உதவி வேளா ண்மை இயக்குனர் புகழேந்தி வரவேற்புரையாற்றினார். இதில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொருட் கள் விற்பனை, வணிகம், பட்டுவளர்ச்சி, மீன்வளர்ப்பு கால்நடை பராமரிப்பு, வேளாண்பொறியியல் துறை உள்பட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட்டது. மேலும் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியை இருமடங்காக பெருக்குவது குறித்தும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**ஊர்வலம்**

மேலும் புகைப்பட கண்காட்சி மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலமும், நவீன சாகுபடி குறித்தும், அரசின் திட்டங்கள் குறித்தும் விளக்கப்பட்டது.

தொடர்ந்து பாரம்பரிய வேளாண் பொருட்களின் மகத்தும் குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இதில் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலம் முக்கிய விதிகளின் வழியே

நடைபெற்றது. இதில் கலந்து கொண்டர்கள் இளநீர், நுங்கு போன்ற பாரம்பரிய வேளாண் பொருட்களின் மகத்துவம் குறித்தும் மருத்துவ குணம் குறித்தும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடியும், கோ ஷங்கள் எழுப்பியபடியும் வந்தனர்.